**தலைப்பு 283 – வனப் பாதுகாப்புத் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 283 - வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜுன் 30 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

1.2 **கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2. **கணக்குகள்**

---

2.1 **ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,182.85 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 2,135.02 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 47.83 மில்லியன் எனப்படும் 2.19 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருவன | 1,351.05 | 1,304.16 | 46.89 | 3.47 |
| மூலதனம் | 831.80 | 830.86 | 0.94 | 0.11 |
| மொத்தம் | **2,182.85** | **2,135.02** | **47.83** | **2.19** |

2.2 **வருமானக் கணக்கு**

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைத்தினால் 2016 ஆண்டிற்கான வருமானக் குறியீடுகள் இரண்டிற்காக ரூபா 1,590.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 2,287.50 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 143.987 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக மிகைத்தல் |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைத்தல் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10:03:07:03 | 90.00 | 115.68 | 25.68 | 28.53 |
| 20:02:01:02 | 1,500.00 | 2,171.82 | 671.82 | 44.79 |
| **மொத்தம்** | **1,590.00** | **2,287.50** | **697.50** | **43.87** |

2.3 **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் |
| 69.00 | 68.04 | 50.00 | 67.87 | 281.00 | 213.56 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட 7002/0000/00/0045/0015/000 இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 119.85 மில்லியனாக இருந்தது.

2.5 **பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் காணப்படும் 07 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 500.92 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0020/000 | 311.67 |
| 6000/0000/00/0006/0021/000 | 149.93 |
| 6000/0000/00/0013/0069/000 | 39.04 |
| 6000/0000/00/0002/0103/000 | 0.15 |
| 6000/0000/00/0019/0028/000 | 0.07 |
| 6000/0000/00/0016/0051/000 | 0.04 |
| 6000/0000/00/0018/0064/000 | 0.02 |
| மொத்தம் | **500.92** |

2.6 **கணக்காய்வு அவதானிப்பு**

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | பொறுப்புக்கள் மீதான பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**பாதீட்டு முரண்கள்**

06 செலவு விடயங்களுக்காக மிகையேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவு விடயத்திற்கான தேறிய ஏற்பாடுகளில் 06 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையான வீச்சு அளவினை கொண்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 9,995,216 தொகைக்கான 99 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.4 வருமானக் கணக்கு

திணைக்களத் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் 02 வருமானக் குறியீடுகளின் மதிப்பீடுகள் தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகள் சமர்ப்பித்தல் ஆகிய கடமைகள் சாட்டப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) 20:02:01:02 இலக்க வருமானக் குறியீடு – அரச காடுகளில் இருந்து கிடைக்கும் வருமானம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கணக்குகளின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 538.70 மில்லியன் வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன், அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரை காலவீச்சில் கொண்டு வரப்பட்டிருந்தது. நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலையில் இருந்தது.

(ii) அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய பெருந்தொகைப் பணம் மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெருந்தொகை பணத்திற்கிடையே ரூபா 160,252,319 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

**(ஆ) 10:03:07:03 இலக்க வருமானக் குறியீடு – தனியார் மரப் போக்குவரத்து**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருமானக் கணக்குகளின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 935,240 தொகைக்கான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானம் 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையான காலவீச்சில் கொண்டு வரப்பட்டிருந்தது. அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் தொடர் செயல் நடவடிக்கை பலவீன நிலைமையில் காணப்பட்டது.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 28301 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,758,777 தொகையாகக் காணப்பட்டதுடன், அந் நிலுவை மீதி 01 மாதம் முதல் 10 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தொடர்செயல் நடவடிக்கை பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் 2015 நவம்பர் 27 திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3.6.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2046.34 மில்லியன் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் நிதியாண்டு இறுதியளவில் அதாவது 2015 திசெம்பர் 18 திகதி தயாரிக்கப்பட்டிருந்தது.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**வருடாந்த பண்டக் கணக்கீடு நடத்துதல்**

2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை 2017 மார்ச் 17 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் திணைக்களத்தினால் 2017 மே 31 திகதி வரை அவ்வறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. இறுதியாக வருடாந்தப் பண்டக் கணிப்பீடு 2015 ஆண்டிற்காக நடத்தப்பட்டிருந்தது.

**3.8 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| (அ) நிதிப் பிரமாணம் 104(1) | இழப்பு ஒன்று அல்லது நட்டமொன்ற ஏற்பட்ட உடனேயே அதன் அளவு மற்றும் காரணத்தை அறுதியாக அறிந்து கொள்வதற்கும் அதற்கு பொறுப்பானவர்களை தீர்மானிப்பதற்கும் பரிசோதனையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். திணைக்களத்தில் ஏற்பட்டிருந்த 09 சேதங்கள் தொடர்பாக அறிவிப்பதற்கு நீண்ட தாமதம் காணப்பட்டது. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 104(3) | காணாமல் போதல்/ நட்டமடைதல் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிப் பதற்காக ஆரம்ப அறிக்கையொன்று உடனடியாக அனுப்பப்பட வேண்டுமெனினும் ஆரம்ப அறிக்கை அனுப்புவதில் 01 மாதம் முதல் 06 மாதம் வரை நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தது. |
| (இ) நிதிப் பிரமாணம் 104(4) | நட்டம் ஏற்பட்ட நாள் முதல் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், திணைக்களத்தில் ஏற்பட்டிருந்த நட்டங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 01 மாதம் முதல் 06 வருடங்கள் வரை நீண்ட தாமதம் ஒன்று காணப்பட்டது. |

**3.9 செயலாற்றுகை**

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**போதியளவினதாக நிறைவேற்றப்படாத முக்கிய தொழிற்பாடுகள்**

திணைக்களம் முக்கிய தொழிற்பாடுகள் போதிய அளவினதாக நிறைவேற்றப்பட்டிருக்காததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) முதிர்ச்சி அடையாத கன்றுகள் பயிர்செய்கைகளை பேணும் செயற்பாட்டுக்காக ரூபா 80 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 4,060 ஹெக்டயர்களுக்கான வேலைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த அளவு 2180.2 ஹெக்டயர்களாக காணப்பட்டது.

(ii) பைனஸ் வன பயிர்ச்செய்கை விரிந்த வீச்சொன்றிற்கு மாற்றி அமைத்தல் மற்றும் பராமரித்தலுக்கு திட்டமிட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 20 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் 495 ஹெக்டயர்களுக்காக விடயங்கள் மேற்கொள்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும் சுமார் 194.6 ஹெக்டயர்களின் விடயம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) இலங்கை மத்திய மலைநாட்டின் மலை உச்சிகளை பாதுகாப்பதற்காக ரூபா 26 மில்லியனிற்கான ஏற்பாடுகளின் மூலம் 681 ஹெக்டயர்கள் பராமரிப்பு விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 361.8 ஹெக்டயர்களில் மாத்திரம் பராமரிப்பு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.10 வங்கிக் கணக்குகள் செயற்படுத்துவதில் குறைபாடுகள்**

**சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்**

வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த 17 வங்கிக் கணக்குகள் தொடர்பான வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத கூட்டுத்தொகை ரூபா 294,993 தொகைக்கான 97 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) இன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.11 இழப்புக்களும் சேதங்களும்**

87 சம்பவங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 11,905,543 இற்கான நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு அல்லது 2017 ஜூன் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.12 முகாமைத்துவத் திறமையின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தனியார் கம்பனி ஒன்றினால் முல்லைத்தீவுப் பெரும்பாகத்தில் ஓலுமடு அடவியில் வமலங்குளம் அரசாங்க காட்டில் கருங்கற்கள் உடைத்து அகற்றுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளின் போது அந்த கம்பனியினால் மிகையாக உடைத்து அகற்றப்பட்டிருந்த கருங்கற்கள் 1374 கியூப்களுக்காக ரூபா 1,513,445 தொகையினை திணைக்களத்தினால் அறவீடு செய்திருக்கவில்லை.

(ii) ஹம்பாந்தோட்டை பெரும்பாகத்தைச் சேர்ந்த மல் அஸ்னாகல காப்புக் காட்டில் மஹ அலுக்கம்ஆர பிரதேசத்தில் கம்பனி ஒன்றினால் நடாத்தப்பட்டு வந்த கருங்கல் வேலைத்தளங்கள் இரண்டினதும், அங்கீகரிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திர வரையறையை மிகைத்து ஏபீஸீ 600 கியூப்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்தது.

(iii) ஹம்பாந்தோட்டை பெரும்பாகத்தில் சதர்ன் தொகுதிக் கம்பனியினால் 2008 பெப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரையான காலப்பகுதியில் மிகையாக உடைத்து அகற்றப்பட்டிருந்த 2462.14 கியூப்களுக்கான கட்டணம் ரூபா 246,214 மற்றும் 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை பயன்படுத்திய தரைப்பகுதிக்காக மற்றும் தரைப்பகுதியை செப்பனிடுவதற்காக (1205.36 பர்சஸ்) செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணம் ரூபா 11,026,608 தொகை ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்திருக்கவில்லை.

(iv) 2014 செப்தெம்பர் 04 திகதி திணைக்களத்தின் வாகனம் ஒன்றிற்கு நேரிட்டிருந்த நட்டம் ரூபா 474,300 தொகை என பெறுமதி மதிப்பீடு செய்திருந்தது. அந்த விபத்து ஏற்பட்டு 02 வருடங்கள் 09 மாதங்கள் கடந்திருந்த போதிலும், பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

(v) பன்னிபிடிய நாற்று மேடை வளவில் 13 பழுதடைந்த வாகனங்களும், 07 பெரும்பகுதி வன அலுவலகங்களுக்காக 20 வாகனங்களும், நுவரஎலிய வன கல்லூரியில் 03 வாகனங்களுமாக 36 வாகனங்கள் பாவணைக்கு உதவாத நிலைமையில் காணப்பட்டதுடன், 2015 ஜூலை 10 ஆம் திகதிய 2/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அகற்றப்பட்டிருக்கவில்லை.

**3.13 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர்** | **உள்ளவாறான பதவியணி யினர்** | **வெற்றிடங் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 85 | 65 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 42 | 30 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,385 | 1,070 | 315 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,634 | 1,453 | 181 |
| (v) | ஏனையவைகள் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 05 | - | 05 |
| | **மொத்தம்** | **3,151** | **2,618** | **533** |